பாரதிய ஜனதா கட்சி - தமிழ்நாடு
BHARATIYA JANATA PARTY, TAMILNADU
Phone : 2435 9600, 2434 3444, 2432 7373 Fax : 044 - 2432 1771

**Dr.தமிழிசை சௌந்தரராஜன்** **04.11.2018**
**மாநில தலைவர்**

# பத்திரிக்கை செய்தி

## <u>தீபாவளி வாழ்த்து</u>

ஒளியோடும், ஒலியோடும் மகிழ்வாகக் கொண்டாடக் கூடியது தீபாவளி. இன்று பொருளாதாரத்திலும், முதலீடு செய்வதற்கும் உகந்த நாடு என்ற பட்டியலிலும் இந்தியா முன்னேறி வருகிறது.

நாட்டின் பொருளாதாரம் முன்னேற வேண்டும். ஒவ்வொரு வீட்டின் பொருளாதாரமும் முன்னேற வேண்டும். பட்டாசுக்குப் பயந்து பாதுகாப்பாக கொண்டாட வேண்டும் என்ற நிலைமாறி, பயந்து பயந்து பட்டாசு வெடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பது மாற வேண்டும். அனைவர் வாழ்வும் செழிக்க வேண்டும். பட்டாசு தொழிலில் ஈடுபட்டிருக்கும் பாட்டாளியின் வாழ்வும் ஒளிர வேண்டும்.

ஆக, குழந்தைகள் குதூகலிக்கும் தீபாவளியாகவும், குடும்பங்கள் குதூகலிக்கும் தீபாவளியாகவும், பாரத நாடு மகிழும் தீபாவளியாகவும், தமிழ்நாடு மகிழும் தீபாவளியாகவும் திகழ வேண்டும் என அன்புடன் வாழ்த்துகிறேன். தமிழக பாஜக சார்பில் அனைவருக்கும் எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

என்றும் மக்கள் பணியில்

தமிழிசை சௌந்தரராஜன்

**Dr.தமிழிசை சௌந்தரராஜன்**
மாநில தலைவர்